2009 ஜூலை 1]

போன்ற பொருட்களையும் மலைவாழ் மக்களுக்காக இருக்கிற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், அதை வாங்கி விற்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலும், அந்த மலைவாழ் மக்களுக்கு, வட்டியில்லாக் கடன், மானிய சலுகைகளெல்லாம் மற்ற வங்கிகளைவிடச் சிறப்பாகக் கிடைக்கும் என்ற காரணத்தினால், கனிவோடு பரிசீலிக்க வேண்டுமெனத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அவருக்குச் சொல்லியிருப்பதைப்போல, அதிகாரிகளை அனுப்பி, அவர் சொல்வதும், நான் சொல்வதும் எப்படியிருக்கிறது என்பதைப் பரிசீலித்து, ஓரளவிற்கு அவர் சொல்வதிலே சற்று உண்மை இருக்குமானால், நிச்சயமாக அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

64—

கட்டடம்

***60189—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, மேலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேலூரில் பகுதி அலுவலகம் இயங்கி வருகிறது. மேலூர் பகுதி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால், அங்கே இடம் இருக்குமானால், இந்த ஆண்டு புதிய கட்டடங்கள் கட்டப்படும் திட்டத்தில் மேலூரையும் இணைத்துக்கொள்ளலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2009 ஜூலை 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரில் இயங்கி வரும் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. மேலூரில் பகுதி அலுவலகம் வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே நான் பேசி, கடந்த 2002 ஆம் ஆண்டு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நாங்கள் பெற்றுக்கொண்டோம். தற்போது அந்த அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கே நகராட்சிக்குச் சொந்தமான இடம் அதிகமாக இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்த ஆய்வாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கடந்த மூன்றாண்டு காலத்தில் மட்டும் 14 இடங்களிலே R.T.O. அலுவலகங்களுக்குப் புதிய அலுவலகங்கள் கட்டப்பட்டுள்ளன. 17 இடங்களிலே Unit அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகளை உருவாக்க வேண்டுமென்பதற்காகவே, இந்தத் துறையின்மூலமாக service tax என்ற அளவிலே ஒரு தொகையை வசூலித்து, கட்டடங்கள் கட்டுவது, கணினிமயமாக்குவது போன்ற பணிகளுக்காக அரசு நிதியொதுக்கி வந்திருக்கிறது. எனவே, கட்டடங்கள் கட்டுவதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. இடம் இருந்தால், அதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலமாக ஒதுக்கித் தருவார்களேயானால், புதிய கட்டடம் இந்த ஆண்டு கட்டப்படும். மற்ற இடங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியா சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை 46 R.T.O. அலுவலகங்கள்தான் இருந்தன. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, கடந்த மூன்றாண்டு காலத்தில் மட்டும் 15 புதிய R.T.O. அலுவலகங்கள் திறக்கப்பட்டு, அவற்றிலே 14 அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

2009 ஜூலை 1]

எனவே, கட்டடம் கட்டுவதற்கு உரிய நிதி இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலமாக இடம் ஒதுக்கித் தருவார்களேயானால், இந்த ஆண்டு அந்தக் கட்டடம் கட்டப்படும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 49 பகுதி அலுவலகங்கள் இருப்பதாகவும், அவற்றிலே மூன்று அலுவலகங்கள்தான் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருவதாகவும், ஆறு புதிய கட்டடங்களுக்கான கட்டடப் பணிகள் இந்த ஆண்டு நடந்து வருவதாகவும் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறியிருக்கின்றார்கள். மேலூரிலேயுள்ள பகுதிநேர அலுவலகத்தில், இதுவரை 20,000-க்கும் மேற்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாதத்திற்கு 400-க்கு மேற்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன; மாதத்திற்கு 150-க்கு மேற்பட்டவர்கள் வண்டிகளைப் புதுப்பித்துக்கொண்டிருக்கிறார்கள்; 250 பேருக்குமேல்* licence *எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை வருடத்திற்கு 4 கோடி ரூபாய் வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இதையெல்லாம் கணக்கில்கொண்டு, இந்த ஆண்டு நகராட்சி இடத்திலேயே கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

ஏற்கெனவே இரண்டு இன்ஸ்பெக்டர்கள் இருந்தனர். தற்போது ஒரு இன்ஸ்பெக்டர்தான் அங்கே பணிபுரிகிறார். எனவே, கூடுதலாக இன்ஸ்பெக்டர் நியமனம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஒரே ஒரு யூனிட் அலுவலகம்தான் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வந்தது. 2007-2008 ஆம் ஆண்டு 5 புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, திருச்செந்தூர், வள்ளியூர் ஆகிய இரண்டு இடங்களிலும் கட்டடங்கள் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டிருக்கின்றன. மூன்று கட்டடங்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு பார்த்தால், கூடலூர், குடியாத்தம், ஆரணி போன்ற இடங்களில் இப்போது கட்டடங்கள்*

கட்டிக் கொண்டிருக்கிறோம். அதற்கடுத்த ஆண்டு, 2008-2009 ஆம் ஆண்டு சிதம்பரம், மயிலாடுதுறை, சத்தியமங்கலம் போன்ற இடங்களில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, இப்போது 17 புதிய கட்டடங்கள், யூனிட் அலுவலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

ஒரே ஒரு பிரேக் இன்ஸ்பெக்டர்தான் பணியாற்றுகிறார் என்று சொன்னார்கள். 45 பேர் தேவை என்று நாங்கள் கேட்டதற்கு, நேற்று தமிழ்நாடு தேர்வாணையம்மூலமாக ரிசல்ட் கொடுத்திருக்கிறார்கள். வெகு விரைவிலே தேர்வாணையம்மூலம் இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்பட இருக்கிறார்கள். தேர்வு செய்யப்பட்டவுடன் நியமிக்க முடியும்.

அதேபோல, கட்டடம் கட்டுவது குறித்து நான் மீண்டும் சொல்கிறேன்; நிதிப் பிரச்சினை இல்லை. ஏற்கெனவே துறையின் சார்பாகக் கேட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி இடத்தைப் பெறுமாறு ஒவ்வொரு R.T.O.-வுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இடத்தைப் பெற்று, இந்த ஆண்டு கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

திரு. கே. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வியாசர்பாடியில் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. வாடகைக் கட்டடத்திலே செயல்படக்கூடிய காரணத்தினால், வீட்டு உரிமையாளருக்கும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கும் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்புகூட அந்த அலுவலகத்தின் கதவுகள் பூட்டப்பட்டதாக வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தெரிவித்தார். எனவே, வியாசர்பாடியிலே செயல்படக்கூடிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2009 ஜூலை 1]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களைப் பொறுத்தவரையில் அவை சொந்த இடம் தவிர வாடகை இடங்களிலே இயங்குகின்றபோது, அங்கு அதிகமான வாகனங்கள் நிறுத்தப்படுகின்றபோது, அருகிலிருக்கின்ற வீட்டுக்காரர்களுக்குத் தொந்தரவாக இருக்கிறதென்று கருதி, எந்தெந்த இடங்களில் அப்படி இடைஞ்சலாக இருக்கிறதென்பதைக் கண்டறிந்து, இடம் மாற்றுவதற்காக முயற்சியெடுத்து, கடந்த ஆண்டு திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தை வாடகைக்குப் பிடித்து, இப்போது இடைஞ்சலாக இருக்கிற இடங்களை மாற்றிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால், சென்னையில் புதிய இடம் கிடைப்பதென்பது மிகவும் சிரமமாக இருக்கின்றது. புதிய இடம் வாங்கிக் கட்டுவதென்று சொன்னால்கூட, மிகப் பெரிய தொகை செலவழிக்க வேண்டியிருக்கிறது. எனவே, துறை அதை கவனத்திலே கொண்டிருக்கிறது. இடைஞ்சலாக இருக்கிற இடங்களுக்குப் பதிலாக வேறு இடம் பெற்று, ஊரைவிட்டு சற்றுத் தள்ளி அந்த அலுவலகத்தை வைக்கலாம் என்ற கருத்துரு இருக்கிறது. அது குறித்து கவனித்து, விரைவில் ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவு வண்டியில் பிரயாணம் செய்கின்றபொழுது பார்த்தால், அதில் பொருத்தப்பட்டிருக்கின்ற இருக்கைகள் மிகவும் பழுதடைந்து, அழுக்கேறியிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், மூட்டைப் பூச்சித் தொந்தரவால் பிரயாணிகள் மிகவும் அல்லல்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர், மூலக் கேள்விக்குச் சம்பந்தமே இல்லாமல் மூட்டைப் பூச்சிபற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிகவும் அவசரமானது; கேட்க வேண்டியது; மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் இருந்தால்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போர்க் கால அடிப்படையில் மூட்டைப் பூச்சித் தொந்தரவை

நிறுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 1,026 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே, spare பேருந்துகள் போக, 900 பேருந்துகள் வழித்தடத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அனைத்து வண்டிகளும் பழைய வண்டிகளாக இருந்தன.

இந்த மூன்று ஆண்டு காலத்தில் மட்டும் கிட்டத்தட்ட 400 புதிய ultra deluxe வண்டிகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை கவனத்தில் கொண்டு சரியானபடி பராமரிக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மூட்டைப் பூச்சிகளை அறவே ஒழிக்கின்ற பணியை இன்னும் ஒரு வார காலத்தில் மேற்கொண்டு, அதற்கு மருந்து அடித்து, ஒழிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பொன்னேரி வட்டத்திற்கும், கும்மிடிப்பூண்டி வட்டத்திற்கும் சேர்ந்து இருக்கின்ற ஒரே இடம் அதுதான். அதற்கான இடமும் தேர்வு செய்து மூன்று ஆண்டு காலம் ஆகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இடம் இருக்குமானால் பணம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, என்னுடைய தொகுதியில் அதற்கான இடத்தினைத் தேர்வு செய்திருக்கின்ற காரணத்தினால், மக்களின் நலன் கருதி, பொன்னேரிக்கும், கும்மிடிப்பூண்டிக்கும் சேர்ந்த இடமாக இருக்கின்ற இடத்தில், அதற்கான இடம் தேர்வு செய்திருக்கின்ற காரணத்தினால், அந்தக் குறிப்பிட்ட இடத்தில் இந்த ஆண்டே தொடங்குவதற்குண்டான வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

2009 ஜூலை 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தேர்வு செய்யப்பட்டிருக்குமானால், இந்த ஆண்டு கட்டடம் கட்டுவதற்குண்டான முயற்சியினை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று நிச்சயமாகக் கட்டப்படும். மேலும், கும்மிடிப்பூண்டி வட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவில் குஜராத் மாநிலத்தை அடுத்து தமிழ்நாட்டிலேதான் Integrated—ஒருங்கிணைந்த சோதனைச் சாவடி அமைக்கின்ற திட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ரூ.72 கோடி செலவிலே அனுமதியளித்திருக்கிறார்கள். பெத்திகுப்பம் என்ற இடத்திலே ஒரு நவீன சோதனைச் சாவடியை அமைக்க இருக்கிறோம். எனவே, கும்மிடிப்பூண்டி பகுதியை கவனத்தில்கொண்டு அனைத்துப் பணிகளும் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அங்கு கட்டடமும் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூரில் 10 ஆண்டு காலமாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குக் கட்டடம் கட்டுவதற்கான இடத்தினையும் அரசுக்கு வழங்கியிருக்கின்றோம். எனவே, நடப்பாண்டிலே கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், கிராமப் பகுதிகளிலே படிக்கின்ற மாணவ, மாணவிகள் நகரப் பேருந்துகள் இல்லாமல், அரசுப் பேருந்துகள் இல்லாத பகுதிகளிலிருந்து தனியார் பேருந்துகளில் வரவேண்டிய கட்டாயச் சூழல் இருக்கிறது. எனவே, மினி பஸ் ஓடுகின்ற அந்த கிராமப் பகுதி மாணவர்கள் பள்ளிக்கூடம் வருகின்ற வகையில், அந்த மாணவர்களுக்கு மினி பேருந்துகளிலேயும் இலவச பஸ் பாஸ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டே நம்முடைய உறுப்பினர் அவர்கள்

கட்டடம் கட்ட வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு உரிய கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. நிதித் துறையின்மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அது வருகின்றபோது இந்த ஆண்டு அந்தக் கட்டடம் கட்டப்படும். மினி பேருந்துகளைப் பொறுத்தவரையில் சிறிய, குறுகிய சாலைகளில் மினி பேருந்துகளை இயக்கிடுவதற்கான அந்த அனுமதி என்பது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் புதிய திட்டத்தின்கீழ், 3,500-க்கு மேற்பட்ட மினி பேருந்துகளுக்கு வழங்க வேண்டுமென்று இப்போது உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கான பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்போது இருக்கிற பிற பேருந்துகளில், தனியார் பேருந்துகளில் பஸ் பாஸ் அனுமதிக்கப்படுவதில்லை. அரசாங்கப் பேருந்தில் மட்டும்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அது குறித்து மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் முடிவு எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் உருவாவது பற்றிச் சொன்னார்கள். அதிலிருந்து வருகின்ற வருவாயினை, Road Tax என்ற வகையில் வாகனம் அனைத்திற்கும் நாம் செலுத்தி வருகின்ற அத்தகைய நிதி முழுமையாகச் சாலைகளில் பயணம் செய்பவர்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறதா? எந்த அடிப்படையில் அந்த நிதி மற்ற துறைகளின்மூலம் பயன்படுத்திட வேண்டுமென்று Road Tax செலுத்துகின்ற வாகன உரிமையாளர்கள் விரும்புகிறார்களோ, அந்த வகையில் முழுமையாக இந்த அரசு அதற்குண்டான நிதியைப் பயன்படுத்துகிறதா என்பதை உங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது எப்படிப் பயன்படுத்தினார்களோ, அப்படித்தான் இப்போதும் பயன்படுத்தப்படுகிறது. அதிலே ஒன்றும் மாற்றமில்லை. நீங்கள் அமைச்சராக இருந்தபோது மொத்தம் 46

2009 ஜுலை 1]

அலுவலகங்கள்தான் இருந்தன. இப்போது கிட்டத்தட்ட 90 அலுவலகங்கள் வந்திருக்கின்றன. நீங்கள் இருந்தபோது கட்டியது 22 சொந்தக் கட்டடங்கள். யூனிட் ஒரு கட்டடம். இப்போது புதிய கட்டடங்கள் மட்டும் 33 இடங்களிலே கட்டப்படுகின்றன. சாலைகளைப் பராமரிப்பதைப் பொறுத்தவரையில், உங்களுக்கெல்லாம் தெரியும், அவை தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்பட்டு, தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில்கூட சாலைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். எனவே, அரசுக்கு வருகின்ற வருவாயை எந்தெந்தத் துறைக்கு எப்படி அனுப்ப முடியுமோ, அப்படி அனுப்பித்தான் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களுடைய ஆட்சி என்ற மணிமகுடத்திலே மாணிக்கக் கல்லாகப் போக்குவரத்துத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. வட இந்திய மாநிலங்களான மேற்கு வங்கம், பீகார், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று பார்த்தால், நம்முடைய போக்குவரத்துத் துறை எந்த அளவிற்கு உயர்ந்து இருக்கிறது என்பது தெரியும். திருவண்ணாமலையிலிருந்து, என்னுடைய தொகுதி போளூர் 35 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிறது.

அங்கே tractor, two-wheeler-களுக்கு எல்லா dealer-களும் இருக்கிறார்கள். தினம், தினம் புதிய, புதிய வாகனங்கள் பதிவிற்காகச் செல்கின்றன. ஒரு நாளைக்குக் குறைந்தது 100 பேராவது licence எடுக்கச் செல்கிறார்கள். எனவே, போளூரிலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் ஒரு கோடியே பத்து இலட்சம் வாகனங்கள் இப்பொழுது இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் 3,875 வாகனங்கள் சராசரியாகப் பதிவு செய்யப்படுகின்றன. அதைக்

[2009 ஜூலை 1

கணக்கிலே கொண்டு, இருக்கின்ற அலுவலர்கள் எவ்வளவு பணி செய்ய முடியும் என்பதைக் கணக்கில் கொண்டுதான், புதிய அலுவலகங்கள் ஆங்காங்கே திறக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 30-க்கும் மேற்பட்ட புதிய அலுவலகங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு அலுவலர்கள் எவ்வளவு இடத்தில் தேவை என்பதைக் கண்டறியச் சொல்லியிருக்கிறோம். அப்படி உங்களுடைய போளூர் வருமானால், அதைப்பற்றி சிந்திக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

65—

செவிலியர் பயிற்சிப் பள்ளி

***59302—திரு. எம்.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதியில் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளி அமைக்கத் தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றபொழுது, ஆரம்ப சுகாதார நிலையத்திலும் சரி, பொது மருத்துவமனையிலும் சரி, இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு டாக்டர். பொது மருத்துவமனைக்கு யாராவது ஒரு டாக்டர். இரவில் டாக்டரே இருக்க